**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 14/2020**
**நாள் 09/12/2024 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878 ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஆனந்த பாபு | த/பெயர் – செங்கன் |
| வயது – 39 | தொழில் – |
| விலாசம் – சின்ன நத்தம் கிராமம், மங்காவரம் அஞ்சல், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம். | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கை எனது சித்தப்பா மகன் அசோக் என்பவர் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார். எனது தாத்தா பெயர் பாலு என்கிற பாலப்ப ரெட்டி ஆகும். மேற்படி எனது தாத்தாவிற்கு செங்கன், அப்பாவு என்ற 2 மகன்கள் மள்ளிகா, விஜயா ஆகிய 2 மகள்கள் மேற்படி இருவரும் இவ்வழக்கின் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் ஆவர். எனது தந்தை செங்கன் எந்த தேதியில் இறந்தார் என்று ஞாபகம் இல்லை. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு 2016 ஆம் ஆண்டு இறந்தார். முதல் பிரதிவாதி எனது தாயார். 2 மற்றும் 4 எனது உடன் பிறந்த சகோதரிகள் ஆவர். வாதியின் தாயார் பெயர் தெரியாது. வாதியின் தந்தை அப்பாவு எந்த வருடம் காலமானார் என்றால் சுமார் 2000 முதல் 2002 க்குள் இறந்திருப்பார். அசோக் தாயார் சுமார் அவருடைய கணவர் இறந்து சுமார் 4,5 வருடங்களுக்கு பிறகு இறந்துவிட்டார்.

வாதியின் பெற்றோருக்கு வாதி மட்டுமே சட்டபடியான வாரீசு ஆவார். அவர் உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. எனக்கு மற்றும் எனது சாகோதரிகள், தாயார் மற்றும் எனது அத்தைகள் ஆகியோருக்கு ஒரே வழக்கறிஞர் தான். ஆனால், நாங்கள் தனித்தனியாக வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி அனைவரின் எதிர் வழக்குரையிலும் அவர்களுடைய பாகத்தை எனக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்கிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வழக்கு சொத்தில் தான் விவசாயம் செய்து வருகிறேன். வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். வாதி எந்த தேதியில் பிறந்தார் என்று எனக்கு தெரியாது. தற்போது வாதிக்கு சுமார் 26 வயது இருக்கும். நான் எனது சாட்சி வாக்குமூலத்தல் வழக்கு சொத்துக்கள் எனது மாமனார் பாலு ரெட்டி என்கிற பாலப்ப ரெட்டிக்கு உாிமையானது என்று கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு எனது வழக்கறிஞரிடம் கூறவில்லை. பி.த.சா ஆ 2 சுத்த கிரைய ஒப்பந்தம் பத்திரத்தில் அப்பாவு கையொப்பம் செய்யும் போது நான் நோில் பார்க்கவில்லை. எனவே மேற்படி ஆவணத்தில் அப்பாவு தான் கையொப்பம் இட்டார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது பதில் உரையில் பி.த.சா ஆ 2 ஆவணத்தில் தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது நிரூபாண வாக்குமூலத்தில் மேற்படி தேதியை கூறியுள்ளது வழக்கிற்காக என்றால் சரியல்ல. எனது பதில் வழக்குரையில் பி.த.சா ஆ 2 ஆவணமானது எனது தந்தைக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாக

கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், பி.த.சா ஆ 2 ஆவணம் எனது தாயாா் பெயருக்கு ஏற்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகறிக்கவே வழக்கிற்கு பின்னிட்டு பி.த.சா ஆ 2 கிரைய உடன்படிக்கையை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் பி.த.சா ஆ 2 ஆவணம் அதில் சொல்லியுள்ள தேதியிலேயே ஏற்ப்பட்டிருந்தால் மேற்படி விவரத்தையும் அதன் தேதியையும் நாங்கள் தாக்கல் செய்த எதிர் வழக்ரையில் கூறியிருப்போம் என்றாலும் அவ்வாறு கூறாததில் இருந்து மேற்படி ஆவணம் வழக்கிற்காக தாயாா் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது என்றால் சரியல்ல. வாதி பி.த.சாஆ 2 ஆவணத்தில் உள்ள விவரங்களையும் அதில் உள்ள கையொப்பத்தையும் பொய் என்று மறுத்துள்ள நிலையில் அதில் உள்ள கையொப்பம் அப்பாவு கையொப்பம் தான் என்பதை நிரூபிக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பி.த.சா ஆ 2 உள்ள கையெழுத்து நிரூபிக்க அப்பாவு கையொப்பம் செய்து ஏற்படுத்திய வேறு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. 1991ம் வருடம் வாக்கில் அப்பாவு மருந்து சாப்பிட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டார் அப்போது எனக்கு சுமார் 8, 9 வயது இருக்கும். நான் எனது வாக்குமூலத்தில் 1991ம் வருடம் அப்பாவுக்கு மருத்துவ செலவு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவருக்கு என்ன மருத்துவ செலவு ஏற்ப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. அவருக்கு எந்த மருத்துவ மணையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

மருத்துவ செலவு செய்த விவரங்களை நிரூபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**